தொகுதி- ருசு
பகுதி-அ

Vol. 56
No. 8

செந்தமிழ்

திருவள்ளுவர்
ஆண்டு 1991
சார்வரி — கார்த்திகை
NOVEMBER-1960

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

உள்ளுறை

1. மங்கல வாழ்த்துப் பாடலின் மாண்பு 225
புலவர். இரா. இளங்குமரன், திருப்பரங்குன்றம்

2. அங்கதச் செய்யுள் 233
திரு. மது. ச. விமலானந்தம் எம். ஏ., தஞ்சாவூர்

3. இன்பத்திற் கிடுண்டோ? 245
நாவரசன், மதுரை.

4. இளம்பூரணர் எழுத்துரை 246
ஆ. சிவலிங்கனார், மயிலம்.

5. சங்கச் செய்திகள் 249

"செந்தமிழ்" ஆசிரியர் குழு

1. நிர்வாக ஆசிரியர். தமிழவேள். திரு. பி. டி. இராசன். B. A., (Bar-at-Law) M. L C.

2. திரு. சித்தாந்தகலாநிதி. பேராசிரியர், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை. தியாகராசர் கல்லூரி, மதுரை.

3. டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனார் M. A. L. T. M. O. L. Ph. D சென்னை.

4. திரு. பேராசிரியர். பி. சோதிமுத்து. M. A. B. D.

5. திரு. முகமது சுல்தான் M. A. B. L. வழக்குரைஞர், மதுரை.

6. திரு. வி. சண்முகசுந்தரம் M. A. B. L. செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம். அரசாங்க வழக்குரைஞர், மதுரை.

7. திரு. கி. பழநியப்பன், துணைத்தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம்

8. வித்துவான். திரு. கு. மா. திருநாவுக்கரசு, பொறுப்பாசிரியர், தமிழ்விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

உ
கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி. ருசு Vol. 56	திருவள்ளுவர் ஆண்டு 1991 சார்வரி—கார்த்திகை 1960 — November	பகுதி. அ No. 8

183-ஆம் பக்கத் தொடர்ச்சி.

மங்கல வாழ்த்துப் பாடலின் மாண்பு.

புலவர். இரா. இளங்குமரன்,
மு. மு. உயர்நிலைப்பள்ளி, திருப்பரங்குன்றம்.

திங்களையும் ஞாயிற்றையும் மங்கல வாழ்த்துப் பாடலில் போற்றிய அடிகள், அவற்றை அடுத்து மழையையும் இறுதியில் புகாரையும்போற்றுகின்றார். திங்களையும் ஞாயிற்றையும் அடுத்து மழையைப் போற்றியதற்கும், அதன்பின் புகாரைப் போற்றியதற்கும் செவ்விய காரணங்கள் உளவாதல் வேண்டும். ஏனெனில் இயைபின்றி எடுத்துக்கூறும் இயல்பு உடையரல்லர் அடிகள்.

வெங்கதிர்க் கனலியின் வெப்பத்தால் 'நீர்' ஆவித் தன்மை அடைகின்றது. மண்ணிடை நீராக இருந்த அது நீராவியாகி விண்ணிடைப் பரவுகின்றது. அது தண்காற்றுப் படுதலால் நுண்ணிய நீர்த்துளியாகி மீண்டும் மண்ணிடை மழையாய் வீழ்கின்றது. வெம்மைத் தொடக்கமும் தண்மை முடிவும் உடையது மழை என்பது கண்கூடு இஃது இலக்கிய உலகமே அன்றி அறிவியல் உலகமும் அறுதியிட்டுரைக்கும் உண்மையாகும்.

'மழைக்கருவுயிர்க்கும் அழல்' (10:143) என்று சுருக்கியுரைத்துப் பெருக்கமாகச் சிந்திக்கத் தூண்டுவார் அடிகள். கதிரோனால் எழுந்து படர்ந்த மேகம் 'மலை வெம்மையுற்றது. அவ்வெம்மையை நீரால் தணிவிப்போம்' என்று கருதிச் செல்வது போன்றுளது என்று நயத்துடன் நவில்வர் கம்பர். (பால:28)

தண்மை, வெம்மையுடைய திங்கள், ஞாயிற்றைத் தனித்தனியே வாழ்த்திய அடிகள், அவ்விரண்டு தன்மைகளும் இணைந்ததாம் மழையினை அடுத்து வாழ்த்துதல் தகவுடையதாம்.

அடிகளின் மழை வாழ்த்தினையும், புகார் வாழ்த்தினையும் நினையுந் தொறும் குறுந்தொகைப் பாடல் ஒன்று (40) நெஞ்சிடை முகிழ்த்து எழுதல் உண்டு முகிழ்த்தெழக் காரணம் என்னை எனின் இவற்றிடை அமைந்துள மாறா இணைப்புக்களேயாம் அவ்வுயர்பாட்டு,

"யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம் புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"

என்பது. இவ்வொள்ளிய பாடல் அன்புக் கலப்பினை, நீர் நிலக் கலப்புடன் இணைத்து விளக்கி நிற்றலை இனிதின் அறியலாம்.

தலைவன் தலைவியர் இருவரும் தாம் இன்னார் என அறிந்து கொண்டார் அல்லர். ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளாமலே அன்பு மிகப்பெற்ற அவர்கள் பெற்றோர்களை அறிந்திருக்க வாய்ப்பு இல்லை. எனினும் இடைவெளி

சிறிதுமின்றி அன்புச்செறிவு அமைந்து விட்டது எப்படி? செம்புலப் பெயல்நீர் போல ஒன்றுபட்டுவிட்டன உள்ளங்கள். வானிடைப் பரவிக்கிடந்த பெயல், செந்நிலத்திடை வீழ்ந்து அச்செந்நிலத்தின் நிறத்தைப் பெற்றுத் தனக்குரிய தாம் நீர்மையுடன் 'செந்நீர்' ஆகின்றது. எங்கோ இருப்பது பெயல்; எங்கோ இருப்பது நிலம்; எனினும் இயற்கையாய் ஒன்றி இணைவு பெற்றன—பிரிக்க முடியா இயைபு பெற்றன! அக்கலப்பு அன்புடை நெஞ்சக் கலப்புக்கு நிகராகின்றது. இத்தகைய மழையை, அன்புள்ளங்களின் ஒன்றுதலால் நிகழும் திருமண வாழ்த்துப் பகுதியிலே போற்றுவது மிகப் பொருந்துவதாகின்றது.

இவ்வாழ்த்தில் மண்ணினை முற்கூறி மழையினைப் பிற்கூறக்கூடாதோ எனின். படைப்பு முறைமையும், உண்மைக்கூறும் உற்று நோக்கிப் பார்க்கும்போது அடிகளின் முறைவைப்பு, தனிச்சிறப்பினதாதல் தெளிவாகும்.

ஐம் பூதங்களின் - (விண், வளி. தீ. நீர், நிலம்) தோற்ற முறைப்படி நிலத்திற்கு முன்னையது நீராம். இதனை "நெருப்பாகி நீர் பயந்தனை, நீராகி நிலம்படைத்தனை" (பெருந்தொகை 125) என்பதும், "நிலத்திற்கு முன்னாகிய நீர்" என்பதும் (புறம் 9 உரை), "உருவறி வாரா ஊழியும், உந்துவளி ஊழியும், செந்தீ ஊழியும், தண்பெயல் ஊழியும், இருநிலத்து ஊழியும்" என்பதும் (பரிபாடல் 2) நிலத்திற்கு முன்னையது நீர் என்பதைத் தெளிவுபடுத்தும். இப்படைப்பு முறையன்றி, இயல்முறையும் நீரை முன்னிறுத்திக் காட்டுதற்கே இடம் தருகின்றது.

"நீர் நெகிழ்தலைக் குணமாகவுடையது; நிலம் செறிதலைக் குணமாகவுடையது" (சிலம்பு3-26 அடியார்). இவ்விரு தன்மைகளும் வாழ்வில் புகுவார்க்கு இன்றியமையாத்

தன்மைகளாம். புதுவாழ்வில் புகுவார்க்கு வற்புறுத்திக் கூறத்தக்கவையும் ஆம். உள்ள நெகிழ்ச்சி அன்பு; உள்ளத் திண்மையாம் செறிவு கற்பு. அன்பும் கற்பும் அமையா வாழ்வு வாழ்வாகாது. வாழ்வில் பொதுவாக ஒன்றியிருக்க வேண்டிய நெகிழ்வையும், செறிவையும் எப்பொழுது உரைப்பது? வாழ்க்கைத் துவக்கத்தில் தானே!

"அன்பு = அருட்கு முதலாகி மனத்தில் நிகழும் நேயம்" என்றார் பேராசிரியர். (தொல்–மெய்-12) "தான் வேண்டப்பட்ட பொருளின்கண் தோன்றும் உள்ள நிகழ்ச்சி" என்றார் களவியல் உரைகாரர். (இறை–1) "அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்றார் வள்ளுவர். களவியலோ 'அன்பின் ஐந்திணை' என்றே முதல் ஒலியை எழுப்புகின்றது.

"உள்ள நெகிழ்வே அன்றிச் செறிவும் வேண்டும்; ஒன்றுக்கு ஒன்று குறையா அளவில் வேண்டும்" என்று கருதும் அறநூல் வள்ளல், பெண் கற்பென்னும் திண்மை உண்டாகப் பெறவேண்டும் என்றும், தற்காத்தலும், தகை சான்ற சொற்காத்தலும் வேண்டும் என்றும் நிறை காக்கும் காப்பு அவசியம் என்றும் பரக்கக் கூறுகின்றார்.

விட்டுக் கொடுத்து விளங்கச் செய்யும் நெகிழ்ச்சி எவ்வளவு தேவையோ அவ்வளவு தேவை கட்டுக்குலையா உளத்துடன் இருந்து கவின் பெறுதல் என்பதாம். வாழ்வு நடக்க உள்ளநெகிழ்வும், வாழ்வு சிறக்க உள்ளச்செறிவும் வேண்டத் தக்கனவாகலின் நெகிழ்வுடைய மழையை முற்கூறி வாழ்த்தி, செறிவுடைய நிலத்தினைப் பிற்கூறி வாழ்த்தினார் என்று ஏற்படுகின்றது.

அன்றியும், ஐம்பெரும் பூதங்களிலே கட்புலனாம் தன்மையன மூன்றும், அவை; தீ, நீர், நிலம். இவற்றுள் தீ

மூன்று தன்மைகளையும், நீர் நான்கு தன்மைகளையும், நிலம் ஐந்து தன்மைகளையும் பெற்றிலங்குவது எவரும் அறிந்ததே. விண்ணுக்கு ஒலியும், காற்றுக்கு ஒலியுடன் ஊறும், தீயிற்கு ஒலி, ஊறுகளுடன் ஒளியும், நீருக்கு ஒலி, ஊறு, ஒளிகளுடன் சுவையும், நிலத்திற்கு ஒலி, ஊறு, ஒளி, சுவைகளுடன் மணமும் உண்டு. இத்தன்மைகள் இவற்றுக்கு உளவாதலை விளக்கமாக இரண்டாம், மூன்றும் பரிபாடல்கள் கூறுவது காண்க.

(முப்பண்புகளையுடைய ஒளியை வாழ்த்தி, நாற்பண்புகளையுடைய மாமழையைப் போற்றி, ஐந்து பண்புகளையுடைய மாநிலத்தை ஏத்தி வரன்முறையாக்கிக் கொண்டுள்ளார் அடிகள் என்றுகின்றது.)

திருமணத்திற்கும் ஐம்பெரும் பூதப் பண்புகளுக்கும் தொடர்பு என்னை எனில் காண்போம். ஐம் பூதங்களின் மயக்கமே உடல். மாந்தர் உடலின் கால்பகுதியில் நிலத்தன்மையும், குடல் பகுதியில் நீர்த்தன்மையும், மார்புப் பகுதியில் நெருப்புத் தன்மையும், கழுத்துப் பகுதியில் வளித்தன்மையும், தலைப்பகுதியில் விண் தன்மையும் சிறப்பு நிலை பெற்றுத் திகழ்ந்து, பூதங்களின் மயக்கமே உடல் என்பதைத் தெளியக் காட்டும். ஐம்பூத மயக்கமாம் உடலில் ஐம்பூத இயல்பும் (சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்) செறிந்திருத்தல் தானே இயல்பு. இவ்வியல்பினை வளர்க்குமாறும், சிறக்கச் செய்யுமாறும் அன்றோ வாழ்க்கை அமைப்பு இருத்தல் வேண்டும்! இவ்வியல்புகளை வளர்க்குமாறு வாழ்க்கை உளதா? மண வாழ்க்கை உளதா?

'கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும் ஒண்டொடி கண்ணே உள' என்று வள்ளுவர் பேசிய பின், 'சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்' ஐந்தென அவர் வகுத்துக் காட்டியபின் பெண்மையினிடத்தே ஐம் புலவின்பமும் அமைந்துளது எனல் அவசியமற்ற ஒன்று.

மாந்தர் எவருக்கும் உரியதாம் சுவை நிலைக்களத்தைச் சுட்டிக் காட்டினர் அறநூலார். அஃது அவர்க்கு இயல்பு. ஆனால் அடிகளோ தம் காவியச் சிறப்புக்கேற்ப மணவாழ்வின் செறிநிலை இன்பத்தை உரைக்கின்றார்—கோவலன் வாயிலாகக் கண்ணகியைப் பாராட்டுமுகத்தான்!

மனையறம் புகுந்து மங்கல அமளியிலே இருக்கும் கோவலன்,

"மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே" என்று

கண்ணகியைப் பாராட்டுகின்றான். இப்புகழ் உரையிலே ஐம்புலச் சுவையும் உளவாதலை "கட்கு இனிமையான் மாசறவோடிய பொன்னை ஒப்பாய், ஊற்றின் இன்பத்தான் முத்தைஒப்பாய் உயிர்ப்பின் இனிமையால் குற்றமற்ற விரையை ஒப்பாய், சுவையின் இனிமையால் கரும்பை ஒப்பாய், இனிய மொழியை உடைமையால் தேனை ஒப்பாய்" என்றும், இவற்றைச் சொல்லியது ஒளியும், ஊறும், நாற்றமும், சுவையும், ஓசையுமாகலின் "கண்டு கேட்டுண்டுயிர்த் துற்றறியுமைம் புலனும் ஒண்டொடி கண்ணே யுள" என நலம் பாராட்டப் பட்டன என்றும், அடியார்க்கு நல்லார் பொருளும் விளக்கமும் எழுதிச் செல்வது அவரது புலமையை விளக்காநிற்கும்.

மணம் மலருக்கு இயற்கை! மலருக்குத் தோற்றும் இடம் மண். மண்ணின் தனிச் சிறப்புத் தன்மை மணம். மணம் செறிந்து கூடிநிற்குமிடம் மலர். ஆதலால் மலருக்கு மணம் இயல்பாகிவிட்டது, மணமில்லா மலரை மலரென மதிப்பதும் வழக்கில் இல்லை.

இம்மலர்களைப் போலவே மக்களையும் மலர் எனக் கொண்டது தண்டமிழ் உலகம். 'அவன் அரும்பினன்'

என்று பேசும் வழக்கு ஆண் ஒருமலர் என்பதை மெய்ம்மைப் படுத்தும். 'அவள் பூப்படைந்தாள்' என்னும் நடைமுறை பெண் ஒருமலர் என்பதை உறுதிப் படுத்தும். அரும்புதலும், பூத்தலும் மலருக்குத்தானே உண்டு! அரும்பிய ஒன்றும் பூத்த ஒன்றும் மணம் பரப்பாதிருப்பின் பயன் என்ன? மணத்தின் பிறப்பிடமாம் மண்ணிடைத் தோன்றியதன் பயன்தான் என்ன? மலரில் மணம் இருத்தல் இயற்கை போலவே மாந்தர் மணம் செய்து இன்புற்று வாழ்தலும் இயற்கை! மாற்று வழிகள் இயற்கை யல்லா வழிகள்; செயற்கை வழிகள். மணத்திற்கு உறையுளாம் மண்ணை வாழ்த்துவதும், மலரையும் மணத்தையும் பெருக்கும் மழையை (ஐங்குறு. 328) வாழ்த்துவதும் இயற்கை வாழ்த்தாம்.

'மழை' என்னும் சொல்லுக்கு 'இன்பம்' என்னும் பொருள் உளதாதலைப் பெருந்தொகை*காட்டும். இன்பப் பொருட்டாம் மழையை வாழ்த்துதல் இன்ப வாழ்த்தாக-மங்கலவாழ்த்தாக அமைதல் நோக்கத்தக்கது.

---

* 1 காந்து மகிற்புகையுங் கத்தூரி யும்புழுகுஞ்
சாந்து மிகநாறுந் தாழ்குழலும்- ஏந்துதனந்
தோளோடு தோளிறுக்கத் தோகையு முண்டாமால்
நாளோ மழைநாள் நமக்கு. (2200)

2 பாவடுக்கு மெல்லணையும் பச்சைவட மும்புதிய
பூவடுக்கு மென்குழையும் பூவையரும்—நாவடுக்க
ஒன்றே மொழியு முயிர்த்தோழ னும்வருமால்
நன்றே மழைநாள் நமக்கு. (2201)

3 பொரிப்பு நறுநெய்யும் போனகமுந் தேனும்
பருப்புமின் சர்க்கரையும் பாலும்-விருப்பமுடன்
வாளோ டணையும்விழி மங்கையு முண்டாமால்
நாளோ மழைநாள் நமக்கு. (2202)

திங்கள், ஞாயிறு, மழை எனப் பொதுமை வாழ்த்துக் கூறிய அடிகள் "மாநிலம் போற்றுதும்" என்றோ "நானிலம் போற்றுதும்" என்றோ கூறாது "பூம்புகார் போற்றுதும்" எனச் சிறப்பு முறைமையால் கூறினரே ஏன் எனில் அதன் காரணம் வெளிப்படையாகவே அறியக்கிடக்கின்றது.

புகார் "பொதுவறு சிறப்பிற் புகார்" என்று அடிகளா லேயே குறிக்கப்படுவது ஆகலானும், காவியத் தலைவன் தலைவியர் தோன்றிய இடம் புகார் ஆகலானும், தாம் எடுத்துக்கொண்டு பாடப்புகுந்த பகுதி புகார்க் காண்டம் ஆகலானும், மூவேந்தரையும் ஒப்பமதிக்கும் உளநலம் அடிகட்கு உண்டுஆகலானும், வாழ்த்துக்கும் வரலாற்றுக்கும் தொடர்பு காட்டவேண்டிய இடம் அஃது ஆகலானும் "பூம்புகார் போற்றுதும்" என்று போற்றினர் என்க.

இங்குக் காட்டிய அனைத்தும் திங்கள், ஞாயிறு, மழை, புகார் என வரன்முறை கொண்டமைக்காகக் கண்ட குறிப்புக்களாம். இனி இவ்வாழ்த்திலே அடங்கியுள்ள அறநெறிக் கூறுகள் சிலவற்றைக் காண்போம்.

(தொடரும்)

செய்யுள் வகை 1.

அங்கதச் செய்யுள்

திரு. மது. ச. விமலானந்தம் அவர்கள். எம். ஏ.
தமிழ் விரிவுரையாளர்
சரபோசி அரசர் கல்லூரி. தஞ்சாவூர்

(200-ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிந்தாமணியில்.........

பாடுபட்டுத் தேடிப் பணத்தைத்திரட்டினன் ஒருவன். ஈத்துவக்கும் இன்பம் அறியாது அவற்றை வைத்திழக்கும் வன்கண்மையில் ஈடுபட்டிருந்தான். சேருங்காலத்தில் பொருளை நிறையச் சேர்த்துப் பின்னர் சாகுங் காலத்தில் அதனை அறவழியில் செலவழிக்க எண்ணினன். எண்ணியது ஈடேறவில்லை. முதுமை வருமுன்னே ஒருநாள் திடீரென நோய்வாய்ப்பட்டான். வாய் பேசமுடியவில்லை, கால்களும் நடக்கும் சக்தி இழந்தன. இந்நிலையில் அறம் செய்ய விரும்பிற்று அவன் நெஞ்சம். அருகே நின்ற மனையாட்டியை நோக்கி, பெட்டியிலுள்ள பணமுடிப்பை எடுத்து வருமாறு கையால் செய்கை காட்டினன். சூழ்ந்திருந்த சுற்றத்தார்க்கு அவனது குறிப்பின் கருத்து விளங்கவில்லை. அதுபோது அவன் மனையாள் “ஐயோ! பாவியேன் என் செய்வேன்? விளாம்பழம் கேட்கின்றீர்களே! உங்கள் நோய்க்கு அஃது ஆகுமா? என அங்கலாய்த்தாள்.

கையால் பொதித்துணையே காட்டக்
கயற்கண்ணள் அதனைக் காட்டாள்;
ஐயா,வி ளாம்பழமே என்கின்றீர்
ஆங்கதற்குப் பருவம் அன்று, என்

செய்கோ! எனச்சிறந்தாள் போல்சிறவாக்
கட்டுரையால் குறித்த எல்லாம்
போய்யே பொருளுரையா முன்னே
கோடேத்துண்டல் புரிமின் கண்ணீர்

இது செந்தமிழ் நலம் மிக சிந்தாமணியில் வரும் வசைக் கவிதையாகும். வைத்திழக்கும் வகையற்றவனை வசைமூலம் விளம்பும் திறம் அறியத்தக்கது.

இதுகாறும், செம்பொருள் அங்கதத்திற்குச் சில காட்டுக்களைக் கண்டோம். வெளிப்படையாகக் கூறுவதைவிட, கவிநயம் தோன்றக் கரந்த மொழியாற் கூறலே சிறந்ததாகும். பழிகரப்பு அங்கதமே Satire எனக் கூறுதற்கு ஏற்றதெனலாம், மேலைநாட்டு இலக்கியங்களில் கூடப் பழிகரப்பு அங்கதமே பெரும்பான்மை போற்றப்படுகின்றது. சேக்சுபியரின் வரலாற்று நாடகங்கள் (Historical plays) சிறந்து விளங்குதற்கு இப்பழிகரப்பு அங்கதமும் ஒரு சிறந்த காரணமெனக் கூறுவர். எனவே கரந்து மொழியும் அங்கதத்திற்குச் சில சான்றுகள் காண்போம்.

கரந்துரை அங்கதம்

நீதி நூல்களில்.........

தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான். (குறள் 1073)

என்ற குறளே ஏற்ற சான்றாகும். பொருள்: நெஞ்சத்து அவலமிலா வஞ்சகக் கயவர் சாதாரண மண்ணுலக மக்கட்கு ஒப்பாகார்; ஆனல் அவர்கள் விண்ணுலக தேவர்க்கே இணையாவர். எவ்வாறெனின், தேவர்கள் தம்மை நியமிப்பாரின்றி எண்ணியவற்றைத் தாமே செய்தொழுகுமாப் போல, கீழ் மக்களும் நல்லன தீயனவற்றை ஆராயாது தாம் விரும்புவனவற்றையெல்லாம் விலக்கற்பாடின்றிச் செய்தொழுகும்

இயல்புடைமையான் என்க எனக் கயவரைத் தேவருக்கு ஒப்பிட்டு, கயவர்தம் குணங்களைக் கரந்த மொழியாற் நகைச் சுவை தோன்றக் கடிந்துரைக்கும் திறம் வியந்து செயல் மறந்து பாராட்டற்பாலது.

தனிப்பாடல்களில்........

போர்முகத்தில் முறையறிந்து படைகளைச் செலுத்தத் தெரியாது, கண்ட கண்ட இடங்களிலெல்லாம் வேற் படையை விடுத்து நின்ருன் ஒருவன். இதனைக் கண்டு கவிஞன் ஒருவன், அவனை வேலையுடைய முருகன் எனப் புகழ்வதுபோன்று, படைசெலுத்த அறியா மடையன் என இகழ்ந்து பாடிய செய்யுள் இதோ:

நன்றுய்ந்த செங்கோலாய் நாடிய நின்னிளங்கோக்
குன்றெறிந்த சேந்த னெனமதியா—வன்றிறத்து
நின்றெலிக்குந் தானையோ டெல்லா நிகர்த்தார்மேல்
வென்றெறியும் வேலே விடும்.

இங்கே 'வென்றெறியும் வேலே விடும்' என வசைமொழி கூறியமையும், 'குன்றெறிந்த சேந்தனைப் போல்' எறிந்தான் என ஏற்றிப் போற்றுவதுபோல் கூறியமையும் காண்க. இவண் வசைமொழி கரந்து நிற்றல் காண்க.

கற்ருேர் ஏத்தும் கலியில்........

புறத்துறையில் மட்டுமன்றி அகத்துறைப் பாடல்களி லும் அங்கதம் அமையும் அழகும் திறமும் அறிந்தின்புறற் பாலது. கற்ருேர் ஏத்தும் கலியினின்றும் சில காட்டுக்கள் காண்பாம்.

முறஞ்செவி மறைப்பாய்பு முரண்செய்த புலிசெற்ற
மறந்தலைக் கொண்ட நூற்றுவர் தலைவனைக்
குறங்கறுத் திடுவான்போற் கூர்நுதி மடுத்ததன்
நிறஞ்சாடி முரண்டீர்த்த நீண்மருப் பெழில்யானை
மல்லரை மறஞ்சாய்த்த மால்போற்றன் கிளைநாப்பட்
கல்லுயிர் நனஞ்சாறற் கலந்தியலு நாட!

என்ற கலிப்பாடல் 'நூற்றுவர்க்குத் தலைவனை துரியோதனனைக் கொன்ற வீமன்' எனப் புகழப்பட்டிருப்பினும் துடையில் தண்டு கொண்டெறிதல் மற்போர் முறைமைக்கு இசைவின்மையின் வசையாயிற்று.

அடுத்து 'வண்டுது சாந்தம் வடுக்கொள நீவிய' எனும் மருதக்கலிப்பாட்டில் (28) குறிப்பங்கதம் அமைந்தமை அறிந்து இன்புறத்தக்கது. பரத்தையர்பால் சென்று தலைவன் வீடு திரும்புகின்றான். இதனை யறிந்த தலைவி அவன்பால் ஊடல் கொண்டு, 'நீ புறத்துப் போய் கண்ட விநோதம் என்ன?' என வினவுகின்றாள், தலைவன் 'இனி நாம் இருவரும் மேற்கொள்ளத்தக்க வானப்பிரத்த வாழ்க்கைத் துணையாம் முனிவரைக்கண்டு மீண்டேன்' என்றானாக, அதுகேட்ட தலைவியும், 'சோலையின் கண்ணே மலர் சூடிய மான்பேட்டினை ஒத்தவராய்க் கடவுட்டன்மை யுடையராய் உன்னால் கருதப்படும் பலருள்ளும் எக்கடவுளிடம் தங்கினீர்!' எனக் கேட்டாள். அதற்குத் தலைவன், 'நம் மணவாழ்க்கை நன்னாள் இந்நாள் என வாய்ப்பச் சொன்ன அவர் வீட்டில் தான்' என மீண்டும் தன் பரத்தமையை மறைத்தானாகத் தலைவியும், 'நீவிர் தலையைச் சாய்த்து நாத்தடுமாற கூறிய சொற்களே உண்மையை உணர்த்தி விட்டன; நீர் கண்ட கடவுளர் இயல்பை நான் கூறக் கேட்பாயாக' எனத் தொடங்கி,

"பேறனைச வேட்கையி னின்குறி வாய்ப்பப்
பறிமுறை நேர்ந்த நகையராய்க் கண்டார்க்கு
இறுமுறை செய்யும் உருவொடு நும்மில்
செறிமுறை வந்த கடவுளைக் கண்டாயோ?" என்றும்,
"நறுந்தண் தகரமும் நானமும் நாறும்
நெறிந்த குரற்கூந்தல் நாளணிக் கொப்ப
நோக்கிற் பிணிகொள்ளும் கண்ணொடு மேனாள்நீ

பூப்பலி விட்ட கடவுளைக் கண்டாயோ?'' எனவும்,
''ஈரணிக் கேற்ற ஒடியாப் படிவத்துச்
சூர்கோன்ற சேவ்வேலாற் பாடிப் பலநாளும்
ஆராக் கனைகாமங் குன்றத்து நின்னொடு
மாரி யிறுத்த கடவுளைக் கண்டாயோ?'' என்றும்,
''கண்ட கடவுளர் தம்முளு நின்னை
வேறிகோள் வியன்மார்பு வேறாகச் செய்து
குறிகோளச் செய்தார்யார் செப்புமற் றியாருஞ்
சிறுவரைத் தங்கின் வேகுள்வர்'' எனவும் கூறி-

னாள். பொருள் வருமாறு: நின்னைப் பெறவேண்டுமென்னும் பெருவிருப்பத்தால் நீ குறித்த குறியிடத்தே தப்பாமல் வந்து, விழுந்து முளைத்த பற்களை உடையராய்க் கண்டார்க்கு இறந்துபடும் துன்பத்தைக் யொக்கும் மயக்கத்தைச் செய்யும் வுடிவுடையராய், நும் மனைவியிடத்தே சேரும் முறைமையினை யுடைய கடவுள்ரைக் கண்டனையோ?' எனவும்; 'பார்வையாலே தன் வயப்படுத்தும் கண்கள் வருத்தலால், மணமிக்க குளிர்ந்த மயிர்ச் சாந்தமும், புழுகும், நாறும் கருமணல் போன்ற நெருங்கிய கூந்தலுக்கு நாட்காலத்துச் செய்யும் அலங்காரத்திற்கு ஏற்ற முதல் நாளே மலர்களைத் தூவி வழிபடப் பெற்ற கடவுளைக் கண்டனையோ? எனவும்; கெடாத விரகத்தால் குதிரை முகமும், மக்களுடலுமாகிய இரண்டு அழகுக்குப் பொருந்திய சூரப்ன்மாவைக் கொன்ற சிவந்த வேலையுடைய முருகனைப் புகழ்ந்து. நிறைபாத செறிந்த காம வேட்கையால் திருப்பரங் குன்றினிடத்தே நின்னுடன் மழைக் காலத்தில் பன்னாள் தங்கின கடவுளைக் கண்டனையோ?' எனவும்; 'அங்ஙனம் கடவுளருள் நின் மனத்தை வேறாகப் பண்ணி வானப்பிரத்த ஆசிரமத்தை மேற்கொள்ளச் செய்த முனிவர் யாவரோ? அவர்பால் செல்லாது சிறுபோது நீ இங்கே தங்கி

னும் அவர் வெகுள்வார்! ஆதலின் அவ்விடத்தே செல்வா யாக' எனவும் பொருள் கொள்க.

இப்பகுதியில், தலைமகன் பரத்தையர்பால் ஒழுகும் தீயொழுக்கத்தைக் கடிந்து. அவன் திருந்தித் திகழவேண்டு மெனும் விருப்பத்தால் குறிப்பாற் கூறியமைதலின் இது பழிகரப்பு அங்கதம் ஆயிற்றென்க.

ஐங்குறுநூற்றில்

நகைதோன்ற அமையும் சுடுசொல் அங்கதம் பல. பரத்தமையாகிய புறவொழுக்கத்திலே, ஒழுகி மீண்ட தலைமகனைக் கண்ணுற்ற தோழி,

> பூத்த கரும்பிற் காய்த்த நெல்லிற்
> கழனி யூரன் மார்பு
> பழன மாகற்க எனவேட் டேமே

எனக் கூறினள். இங்கே தலைவன் குறையைக் கற்பனைக் குறிப்பில் புலனாகுமாறு, பூத்தும் பயன்படாத கரும்பினை யும், காய்த்துப் பயன்படும் நெல்லினையும் உடைய ஊரன் என்றது, ஈன்றும் பயன்படாப் பொதுமகளிரையும், குழந் தையைப் பெற்றுப் பயன்படும் குலமகளிரையும் ஒப்பாக நினைப்பவன் தலைவன் என வசைத்தொனி (Satirical Elemeut) தோன்றக் கூறியமை காண்க.

அன்றியும், 'கரும்புநடு பாத்தியுட் கலித்த ஆம்பல், சுரும்புபசி களையும் பெரும்புனலூர' என்று தலைவனை விளிக் கும் வாயிலாகப் பரத்தையர் தங்குதற்குரிய இல்லில் எளி யேன் இருந்து விருந்தினரை ஓம்பலானேன் எனத் தலைவி தலைவனது தீயொழுக்கத்தைக் கடிந்து இடித்துரைத்தமை இனிது புலனாகும்.

இங்கே, கரும்பு நடுதற்காக அமைக்கப்பட்ட பாத்தி என்றமையின், தலைவனுக்கு உகந்த வில மாதர் தங்குவதற்

குரியது இவ்வில்லம் என்பதும், அப்பாத்தியில் தானே தோன்றி வன்பசி போக்கும் ஆம்பல் என்றதனால், தலைவன் விரும்பாத நிலையில் தான் அவ்வில்லின்கண் இருந்து இயன்ற ஞான்று இல்லறம் நடத்துபவள் தலைவி என்பதும் உள்ளுறையாக உணர்த்தப்பட்டுள்ளது.

அடுத்து அகநானூற்றில் அங்கதம் பெறும் இடம்:

சேற்றுநிலை முனைஇய செங்கட் காரான்
ஊர்மடி கங்குலில் நோன்றளை பரிந்து
கூர்முள் வேலி கோட்டின் நீக்கி
நீர்முதிர் பழனத்து மீனுடன் இரிய
அந்தூம்பு வள்ளை மயக்கித் தாமரை
வண்டூது பனிமலர் ஆரும் ஊர!

எனும் அகப்பட்டு (46) பழிகரப்பு அங்கதத்தின்பாற்படும். விலைமகள் வீட்டிலிருந்து வந்த தலைவனிடத்துத் தலைவி கூறுவதாக அமைவது இது.

தலைவனது ஊரில் எருமையானது தனக்குரிய கொட்டில் நீராலும் சாணத்தாலும் தானே சேருக்கிக்கொண்டு, தினையையும் அறுத்துக்கொண்டு வயலுக்குக் காவலாக அமைந்த வேலியையும் கொம்பால் நீக்கி, மீன்கள் இரியத் தாமரையைச்சூழ்ந்த வள்ளையை மயக்கி மலர்ச்சியின்றி வண்டொடு குவிந்த தாமரையை ஆர்க்கும் என்பது பருப்பொருள். 'உனக்குரிய இவளை நீதானே வேறுபடுத்தி, நாணமாகிய தளையையும் அறுத்துக் கொண்டு, பரத்தையர்க்குக் காவலாகிய விறலியையும் பாணனாகிய கேட்டால் நீக்கி, அப்பரத்தையரின் தாய்மாரையும் மயக்கி அகமலர்ந்து உன்னை எதிரேற்றுக் கொள்ளாத மகளிரை நுகர்வான் அல்லையே நீ' என்ற நுண் பொருள் இங்கே கரந்து நிற்றல் காணக.

பரத்தையர் சேரியினின்றும் மீண்ட தலைமகன் யாரையும் அறியேன் என்றானாக, தலைவி அவனது தீயவொழுக்கத்

தைப் பிறிதொரு நிகழ்ச்சிகொண்டு அறிவுறுத்திய செய்தி அகம்–16ஆம் பாட்டில் அமைந்துள்ளது. 'மகிழ்ந! மழலை மொழி பயிற்றும் எம் இளம் புதல்வனைத் தேர் வழங்கு திரு வீதியில் தனியனாய் நிற்பக் கண்ட ஒருத்தி, அப்புதல்வன் நின் உருவொடு ஒத்து விளங்குதலைக் கண்டு, அதுபோது அங்கே எவரும் இல்லாமையால் 'என் உயிரே வருக' எனக் கூறப் பெரிதும் மகிழ்ந்து தழுவி எடுத்து அணைத்தாளாக அந்நிலையில் நான் அங்குச் சென்றேன். என்னைக்கண்ட அவள் மருள, அதுகண்டு நான், குற்றமற்ற இளைய மகளே! யாது பற்றி மயங்கினை, இவனுக்கு நீயும் ஒரு தாயல்லையோ என்று கூறினேனாக, அது கேட்டு அவள், தாம் செய்த களவைக் கண்டுகொண்டார்முன் உடன்பட்டு நிற்பார் போன்று நாணமுற்றுத் தலைகவிழ்ந்து நின்றாள். அந்நிலை கண்ட யான் அவளும் நின் மகனுக்குத் தாயாவாள் என எண்ணி அவளைப் பேணினேனன்றோ?' என்று தலைமகள் கூறி முடித்தாள். தலைவனும் வியப்பும் விம்மிதமும் அடைந்து அப்படியே நின்று விட்டான். இங்கே, தலைவி தலைவனது தீயொழுக் கத்தைக் கரந்த மொழியாற் சிறந்த முறையில் பெற வைத் தமை பாராட்டற்பாலது.

புறநானூற்றில்......

அகத்தினின்று புறத்திற்கு வருவோம். ஏனாதி திருக் கிள்ளி என்பானை, மதுரைக்குமரனார் பாடிய பாடலில் அவனுடைய பகையரசைப் பழித்துரைத்த செய்தி வியக்குமாற்றான் வரையப்பட்டுள்ளது. "பெரும! நீ வடுப் பொருந்திய யாக்கையை உடைய யாதலின் கண்ணுக்கு இனியை அல்லை; கேட்கும் செவிக்கு இனியை; நின் பகைவரோ போருக்கு அஞ்சி ஒடுங்கி நிற்றலால் மெய் சிறிதும் வடுவுறுமையின் கண்ணுக்கு இனியர், கேள்விக்கு

இனியர் அல்லர். இங்ஙனம் நின்னிடத்தும் நின் பகைவரிடத்தும் இனிமையும் இன்னாமையும் இருப்பவும் அறிவுடை உலகம் உன்னையே வியந்து கூறும்! இஃதென்னே!!" என்ற கருத்துடைய புறப்பாட்டு (167) இதோ:

நீயே, அமர்காணி னமர் கடந்தவர்
படை விலக்கி எதிர் நிற்றலின்
வாஅள் வாய்த்த வடுவாழ் யாக்கையொடு
கேள்விக் கினியை, கட்கின் னாயே!
அவரே, நிற்காணிற் புறங் கொடுத்தலின்
ஊறறியா மெய்யாக் கையொடு
கண்ணுக் கினியர், செவிக்கின் னாரே!
அதனால், நீயுமொன் றினியை, யவருமொன்றினியர்
ஒவ்வா யாவுள? மற்றே வெல்போர்க்
கழல்புனை திருந்தடிக் கடுமான் கிள்ளி
நின்னை வியக்குமிவ் வுலகமஃது
என்னே? பெரும! உரைத்திசி னெமக்கே.

பகைவர் உடம்பில் வடுப்படாமையால், பிறர் செவிக்குப் பழி மிகுந்தவராக உள்ளார் எனும் வசை ஒருவகை நயமும் நலிவும் தோன்றக் கூறப்பட்டுள்ளது. இங்கே, நீயும் 'ஒன்றினியை, அவரும் ஒன்றினியர்' எனப் புறமுதுகிட்டோரைப் புகழ்வது போன்று பழித்துள்ளமை பாராட்டும்பான்மையது.

அன்றியும், 'உவர்க் கடலன்ன செல்வரும் உளரே; கிணற்று ஊற்றன்ன நீயுமாருளையே!' என்றொருபுலவர் வள்ளல் ஒருவனை விதந்தோதுமாற்றான் ஈத்துவக்கும் இன்பமறியாச் செல்வரை இழித்துக் கூறியுள்ளார். சிலர் பரந்த செல்வமுடையராய் இருப்பர். இருப்பினும் அவருடைய செல்வம் எவருக்கும் பயன்படாது என்ற குறிப்புத் தோன்ற 'உவர்க் கடலன்ன' என்ற உவமை வந்துளது.

இதே கருத்துப் பிறிதோரிடத்தில் 'தெண்ணீர் பரப்பின் இமிழ்திரைப் பெருங்கடல் உண்ணுராகுப நீர்வேட்டோரே' எனக்கூறப்பட்டுளது. இக்கருத்து, செல்வச் செருக்கு மிக்கார்க்கு ஒரு சவுக்கடி.

அவ்வை தரும் அமுத மொழி

அடுத்து அனைவரும் அறிந்த அரிய பாடல் ஒன்று: அதியமானுல் பெரிதும் புரக்கப்பட்டவர் தமிழ்மூதாட்டி அவ்வை. ஒரு சமயம் அதியன் பொருட்டு அவர், காஞ்சி யாண்ட தொண்டைமானிடம் தூது சென்றுர். தொண்டைமானே, தன் வீரத்தையும் படை பலத்தையும் கண்டு அவ்வையார் வியக்க வேண்டுமென்ற இறுமாப்போடு, வரவேற்றுத் தனது படைக்கலச்சாலையைக் காட்டிப் பெருமைபடப் பேசினுன். அவற்றை செவியேற்றுக் கண்ட செந்தமிழ்ச்செல்வி-அவ்வை காஞ்சிக் காவலனுக்குக் கடுமையான சூடு கொடுக்கிறுர் பாருங்கள்.

> இவ்வே, பீலி அணிந்து மாலைசூட்டிக்
> கண்திரள் நோன்காழ் திருத்தி நெய்யணிந்து
> கடியுடை வியன்நக ரவ்வே; அவ்வே,
> பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
> கொற்றுறைக் குற்றில மாதோ?

என்பதே அப்பாடல். இதனுல், அதியன் அடிக்கடி அஞ்சாது போரில் கலந்து கொள்வதால் அவனுடையபடைக்கலன்கள் போரில் பயன்பட்டுப் பகைவரைக் குத்திக் கிழித்தலால் கங்கும் நுனியும் முறிந்து கொல்லன் பணிக்களரியில் உள்ளன வென்றும், தொண்டையர்கோன் சண்டையில் ஈடுபடாது. அஞ்சி ஒழுகும் இயல்பால் அவனுடைய படைகள் அனைத்தும் சிதைவு ஏதுமின்றி எண்ணெய் பூசப் பெற்று வனப்புடன் காவல்மிகு மாளிகையில் கவர்ச்சியோடு தூங்குகின்றன என்றும் நயம் தோன்றக் கூறிக், காஞ்சிக்

காவலன் கருவிகளைப் புகழ்வது போல் இகழ்ந்து அவனது செருக்கழித்த சிறப்பே சிறப்பு. இதனாலன்றோ இக்கவிதை எவருள்ளத்தும் இடம்பெற்றுளது! பயன் கருதி அமையும் பழிகரப்பு அங்கதத்திற்கு ஓர் அரிய எடுத்துக் காட்டு இதுவாகும்.

செந்தமிழ் - சிந்தாமணியில்......

இனிப் பெருங்காப்பியம் தரும் பழிகரப்பங்கதம் சில கண்டு சிந்தை மகிழ்வாம். திருத்தகு மா மணி சீவக சிந்தாமணியில் சச்சந்தன் எனும் அரசன், மனைவி விசையை பால் விடுதலறியா விருப்பு கொண்டு அமைச்சன் கட்டியங் காரனிடத்து அரசு அனைத்தையும் விடுத்து அந்தப்புரத்தி லேயே போகம் துய்த்து வந்தானாக, நாளடைவில் அக் கொடிய அமைச்சன் அரசனைத் தொலைத்து அரசைத் தன தாக்க முயன்று தன் அமைச்சர் பலரோடும் ஆலோசிக்கும் மளவில் நல்லமைச்சன் தருமதத்தன் தகாத செயல் இது வென எடுத்துரைத்ததை மறுத்து மதனன் என்பான் கட்டியங்காரன் கருத்தோடு ஒட்டிய முறையில் உணர்த்திய செய்தி:

தோளினால் வலிய ராகித் தோக்கவர் தலைகள் பாற
வாளினாற் பேச லல்லால் வாயினால் பேசல் தேற்றேன்,
காளமே கங்கள் சொல்லிக் கருணையாற் குழைக்குங் கைகள்
வாளமர் நீந்தும் போழ்தின் வழுவழுத் தொழியும் என்றான்

என்பதாகும்.

பாட்டின் ஈற்றடியிரண்டும் ஈண்டு எண்ணத்தக்கதாகும். போர் பற்றிய வீரவுரைகளைக் காளமேகம் போல் முழங்கக் கூறி, போரில் தலைப்பட நேர்ந்த ஞான்று அது கண்டு அஞ்சு வார்க்கு, பொரிக் கறிகளோடு சோற்றைத் திரட்டும் அவர்

கைகள் அப்போர்க்கடலை நீந்துதற்கு இயலாது வழுவழுத் தொழியும் போலும் எனப் போர் குறித்துப் பின் வாங்கு வோரைச் சுடுசொல்லாற் பழித்துக் கூறியதும் பழிகரப்பு அங்கதத்தின் பாற்படும்.

கம்பனில்......

கம்பனைக் காணவேண்டாமா? மேகநாதனுக்கும் சுக்கிரீ வனுக்கும் கடும்போர். சுக்கிரீவன் எறிந்த மராமரம் ஒன்றை இந்திரசித்து துணித்து நின்றானாக அனுமன் அவன்மீது ஒரு மலையை வீசி எறிகின்றான், அதனையும் பொடியாக்கி, அனுமனை நோக்கி, சற்று நில்லடா. வில்லெடுத்துப் போர் செய்யாமலேயே உனது வலியை விதந்து உயிருடன் விளை யாடுகிறாய்; உனது கல்லும் மரமும்தாமா என் வலியை அடக்க வல்லவை? என்று கூறுகிறான் மேகநாதன். அதற்கு அனுமன் பதில் விடுகிறான் பாருங்கள்:

வில்லெடுக்க வுரியார்கள் வெய்யசில
வீரரிங் குளர் மெல்லியோய்!
கல்லெடுக்க வுரியானும் என்றனன் அதின்று
நாளை யிடை காணலாம்.

இங்கே, 'சில வில் வீரர்கள் இங்கு இருக்கிறார்கள், கல்லெடுக்க யானும் இருக்கிறேன்' எனப் பொருள் படி னும், 'வில்லெடுக்கும் சில வீரர்களுடன் உனக்குக் கல்லெ டுத்தலாகிய கருமம் புரிய உரியனான வீடணனும் எங்களுடன் உள்ளான் என்ற பொருள் கலந்து நிற்கும் கரந்துரை அங்கதத்தை அறிக.

இறுவாய்:

இது காறும் கூறியவற்றால், மேலை நாட்டு இலக்கியங் களிற் சிறந்து விளங்கும் Satire என்ற செய்யுள் வகை

பண்டு தொட்டே பைந்தமிழ்ப் பேரிலக்கியங்களிலும் அங்கதம் என்ற பெயரில் பயிலப் பட்டு வருகிறது என்றும், இவ் வங்கதம் செம்பொருள், பழிகரப்பு (கரந்துரை) என இரு வகையினதாக நீதி நூல்கள், தனிப்பாடல்கள், சங்கநூற்கள் பிற்காலப் பெருங்காப்பியங்கள் அனைத்திலும் ஏற்றமும் தோற்றமும் பெற்று இலங்கிச் சுவையூட்டி வருகின்றது என்றும் கண்டோம். கண்ட நாம் அருந்தமிழில் அங்கதம் இல்லையென இனியேனும் கூறுதிருப்போமாக

இன்பத்திற் கீடுண்டோ?

(நாவரசன்)

முதல்: இன்பத்திற் கீடுண்டோ? — இவ்வுலகில்
என்றும் அழியா இன்னிசைக் கலைதரும் (இன்)

இடை: அன்புளங் கொண்டே யாவரும் வாழவே
என்பெலாம் உருக்கி இன்னிசைக் கலைதரும் (இன்)

இறுதி: வள்ளுவர் வாய்மொழி, வண்டமிழ்க் காப்பியம்
தெள்ளுதிரு வாசகம், தீந்தமிழ்ப் பாடலால்
உள்ளம் உருக்கியே உணர்வைப் பெருக்கிடும்
எள்ளற் கரியதாம் இன்னிசைக் கலைதரும் (இன்)

211-ஆம் பக்கத்தொடர்ச்சி

இளம்பூரணர் எழுத்துரை

(ஆ. சிவலிங்கனார், மயிலம்)

8. சில விளக்கங்கள்,

இளம்பூரணர் உரையில் சிலவிடங்களில் சில தொடர்களுக்கு அமைதியும் விளக்கமும் தேவைப்படுவனவாம். நூற்பாவும் அத்தொடர்களும் மட்டும் எழுதி அமைதியும் விளக்கமும் எழுதுகின்றேம். யாம் இங்கு எழுதும் இவை தவிர பிறவற்றுக்கும் அமைதியும் விளக்கமும் தேவைப்படலாம். அன்றியும் எழுதப்பட்டனவற்றுள்ளும் தெளிவாக உள்ளனவும் இருக்கலாம். எழுத வேண்டும் என எமக்குத் தோன்றியனவற்றையே எழுதுகின்றேம்.

1. இன்னென வரூஉம் வேற்றுமை யுருபிற்கு
இன்னென் சாரியை இன்மை வேண்டும் (132)

"இது இன் சாரியை முழுவதூஉம் கெடும் இடம் உணர்த்துதல் நுதலிற்று."

இன்சாரியை இன்மை வேண்டும் என ஆசிரியர் கூறியிருத்தலின் உரையாசிரியர், 'இது இன்சாரியை வாராதவிடம் உணர்த்துதல் நுதலிற்று' என்றுதான் எழுதியிருக்க வேண்டும். 'முழுவதூஉம் கெடும் இடம்' என்றெழுதியது விளக்கத்துக்குரியதாம்.

இன் என்ற ஐந்தாம் வேற்றுமை யுருபு பெயருடன் சேரும்போது சாரியை இன் வேண்டுவதில்லை. உருபு புணரியலில்,

அ ஆ உ ஊ ஏ ஔ என்னும்
அப்பா லாறன் நிலைமொழி முன்னர்
வேற்றுமை யுருபிற் கின்னே சாரியை (174

எனவும், ஞநவென் புள்ளிக் கின்னே சாரியை (183)
எனவும், இன்னிடை வரூஉம் மொழியுமா ருளவே (187)

எனவும் பொதுவில் வேற்றுமை யுருபுகள் பெயர்களுடன் புணரும் போது சாரியை இன் வரும் என்று விதித்தார் ஆசிரியர். அதனால்5ஆம் வேற்றுமை யுருபு புணரும்போதும் சாரியை இன்வரும் என்பது போதரும். எனவே, விள + இன் எனப் புணர்க்குமிடத்து இடையில் இன்என்ற சாரியை முதற்சூத்திர (174) விதிப்படி வரும் (விள + இன் + இன்) அவ்விடத்தில் இன்சாரியை வேண்டுவதில்லை யென மேல் (132) சூத்திரத்தால் விலக்குதலின் அதைக் கெடுக்க வேண்டும் (விள + இன்). அதனால்தான் 'முழுவதூஉம் கெடும் இடம் உணர்த்தினர்' என உரையாசிரியர் எழுதினர்.

2. அத்தே வற்றே ஆயிரு மொழிமேல்
ஒற்றுமெய் கெடுதல் தெற்றென் றற்றே
அவற்றுமுன் வரூஉம் வல்லெழுத்து மிகுமே (134)

"ஈண்டு வல்லெழுத்து மிகும் என்றது ஈற்றுவல்லெழுத் தின்றித்திரிந்து முடியும் னகரமும் ணகரமும் லகரமும் ளகரமும் என இவற்றை நோக்கி யென வுணர்க."

இத்தொடரை "ஈண்டு வல்லெழுத்து மிகும் என்றது... இவற்றை நோக்கிச் சாரியைவல்லெழுத்தை யென வுணர்க" என்று விரித்துக் கொள்வோம்.

வருமொழி வல்லெழுத்து இரண்டு வகையில் மிகுந்து வருதல் உண்டு. நிலைமொழி யிறுதியை நோக்கி மிகுதல் என்பது ஒன்று. விள + குறிது என்பன 'விளக்குறிது' என வருமிடத்து நிலைமொழியிறுதி அகரத்தை நோக்கி வருமொழி வல்லெழுத்தானது மிக்கது. இஃது அல்வழிப்

புணர்ச்சி. வேற்றுமைப் புணர்ச்சியிலும் இப்படியே. இருவிள + கொற்றன் என்பன இருவிளக் கொற்றன் என வரும். (இருவிள என்பது ஓர் ஊர்) அன்றியும் இயல்பாக இன்றி விதியீறாக நிற்பினும் நின்ற ஈறு நோக்கி மிகுதலும் உண்டு. மரக்கிளை என்பதில் அதைக் காண்க. இவ்வாறு ஈறுநோக்கி மிகும்வல்லெழுத்தை ஈற்றுவல்லெழுத்து என்பர்.

கலத்துக் குறை என்பதில் நிலைமொழி கலன் என்பது வருமொழி குறை என்பதுடன் சேரும் போது இடையில் அத்துச்சாரியை வந்தது. இந்நூற்பாவின்படிக் கலன் என்பதில் உள்ளனகர வொற்றுக்கெட்டு 'அத்தின் அகரம் அகர முனையில்லை' என்ற விதிப்படி அத்தின் அகரம் கெட்டுக் 'கலத்துக்குறை' என வந்தது. அத்து என்பதன் பின் வந்த வல்லெழுத்து சாரியைநோக்கி வந்த வல்லெழுத்தாகும். நிலைமொழியீற்று னகரஒற்று வருமொழி முதலில் வல்லெழுத்து வந்தால் வேற்றுமைப் புணர்ச்சியில் றகர ஒற்றாகும் என்பது பொதுவிதி. அதன்படிக் கலன் + குறை = கலற்குறை என்றாகும். அத்துச் சாரியை இடைவரவே னகர ஒற்றுத்திரியாது தான்கெடுகிறது. பின் கலத்து என்றாகிறது. கலத்து + குறை என்புழி வருமொழி வல்லெழுத்து, நிலைமொழி (கலத்து என்பது) தனிப்பெயர் அன்மையானும் சாரியை இடைச்சொல் இறுதியது ஆதலினாலும் உயிர் மயங்கியலின் உகர விறுதி நோக்கி மிக்கது என்று கூறுதற் கில்லை, அதனால் சாரியை நோக்கியே மிக்கது என்ன வேண்டும். எனவே 'கலத்துக்குறை' என்பதில் வல்லெழுத் தானது சாரியை வல்லெழுத்தெனப்பட்டது.

(தொடரும்)

மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வுகள்

மதுரைத் தமிழ்ச் சங்கத்தேர்வுகள் பள்ளியிறுதி வகுப்பு (S. S. L. C.), கல்லூரி முன்னிலை வகுப்பு (Pre-University class), கல்லூரி இளங்கலை வகுப்பு—புதியத்திட்டம் (B. A. & B. Sc. New Regulation) முதலான வகுப்புகளுக்கு நடத்த ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன.

தேர்வு நடைபெறும் நாட்கள்.

S. S. L. C	*28—1—61*
P. U. C. Part I	*11—2—61*
B. A. & B. Sc.	*11—2—61*
P. U. C. Advanced Tamil	*18—2—61*

ஒவ்வொரு வகுப்பிலும் அதிக மதிப்பெண் பெற்ற ஐந்து மாணவர்களுக்கு ரொக்கப் பரிசுகளும் வெற்றிபெற்ற அனைவருக்கும் சங்க நற்சான்றிதழ்களும் வழங்கப்பெறும். அரசாங்கத் தேர்வு, பல்கலைக் கழகத் தேர்வுநடப்பதற்கு முன்னதாகவே தேர்வுகளின் விடைத்தாள்கள் திருத்தப்பட்டுத் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்படும். ஒரு பள்ளியில் அல்லது ஊரில் 15 மாணவர்களுக்குக் குறையாமல் தேர்வு எழுதுபவர்கள் இருந்தால் தேர்வுகள் அவ்வவ்விடங்களில் நடைபெறும். 1961ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 5-ஆம் நாள் வியாழக்கிழமைக்குள் சங்க அலுவலகத்தில் பணவிடை வழியாகவோ நேராகவோ ஏற்பட்ட கட்டணங்கள் வந்துசேர வேண்டும். முழுவிவரங்களும் எல்லாப் பள்ளிகள், கல்லூரிகளின் தலைமை அதிகாரிகளுக்கும் அனுப்பப் பட்டிருக்கின்றன.

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச் சங்கம்,

மதுரை-1.

22—12—60

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

I. சங்க வெளியீடு

			ரூ.	அ.	ப.
4.	வைத்தியசாரசங்கிரகம்	—	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	—	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம் பாகம்	—	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	—	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	—	0	6	0
13.	கலைசைச்சிலேடை வெண்பா	—	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	—	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ண சரித்திர விமர்சனம்	—	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (தொகுப்பு)	—	0	4	0

II. செந்தமிழ் வெளியீடு

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	—	0	4	0
2.	கனாநூல் (5) இனியது நாற்பது (உரை)	—	0	3	0
4.	புலவராற்றுப்படை	—	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	—	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	—	0	8	0
9.	அநுமான விளக்கம்	—	0	10	0
10.	அட்டாக யோகக்குறள்		0	2	0
12.	பன்னிருபாட்டியல்	—	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	—	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	—	0	3	0
16.	திருவாரூருலா	—	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	—	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	—	0	4	0
19.	தேவையுலா	—	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	—	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும்உரையும்	—	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	—	0	8	0
24.	குருமொழி வினாவிடை	—	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை	—	0	2	0
26.	திருத்தணிகை திருவிருத்தம்	—	0	1	0
27.	மதுரைத் திருப்பணிமாலை	—	0	8	0
30.	ஞானமிர்தக்கட்டளை	—	0	3	0
32.	மநீஷாபஞ்சகம்	—	0	8	0
36.	உவமானசங்கிரகம்	—	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	—	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	—	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ்	—	0	8	0
41.	பொருட்டொகை நிகண்டு	—	0	6	0
42.	அகராதி நிகண்டு	—	0	12	0
43.	மேகவிடு தூது	—	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	—	0	2	0
45.	தண்டலையார் சதகம்	—	0	4	0
46.	இராமோதந்தம்	—	0	3	0
47.	பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100)		1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	—	0	6	0
52.	கூடற்புராணம்	—	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	—	0	6	0
54.	அரும்பொருள் விளக்க நிகண்டு	—	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	—	0	12	0
56.	பாப்பாவினம்	—	0	10	0
57.	மதுரை மும்மணிக்கோவை	—	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	—	0	3	0
59.	கடம்பர் கோயில் உலா	—	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	—	0	6	0
61.	கலைசைக்கோவை	—	0	12	0
62.	பெருந்தொகை	—	5	0	0
63.	சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை	—	0	5	0
64.	சிராமலைக்கோவை	—	0	12	0
65.	மத்யவியாயோகம்	—	0	2	0
67.	அமிர்தரஞ்ஜநி	—	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும்	—	0	8	0
70.	திருச்சிறுபுலியூருலா	—	0	12	0
71.	துணைத்தலைவர் நினைவுமலர்	—	0	10	0
72.	மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர்	—	2	0	0

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4-50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 54 தொகுதிகள் நிறைவாகி யிருக்கின்றன இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட் பகுதிகள் உள்ள பைண்டுசெய்யாத தொகுதி 1 ரூ. 4 வீதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.

2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு 3 காசு வீதம் கழிவு தள்ளிக்கொடுக்கப்படும்.

இவ்விதழ். மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள் திரு. பி. டி. இராசன் (B. A.. Bar-at-law.) M. L. C. அவர்களால் மதுரை விவேகாநந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.